# JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No.64/2024

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 1 |
| Name | : திரு. அஜித்குமார் |
| Father/Husband's Name | : முருகன் |
| Village | : நெ.52, முருகன் கோயில் தெரு |
| Taluk | : ஆணூர், செங்கல்பட்டு |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 25 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.04.2025.

A1 to A3 accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது ஆணூர் செங்கல்பட்டில் வசித்து தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். நான் இன்ஸ்டாகிராமில் நடிப்பதற்கு வாய்ப்பளிப்பதாக ஒரு நம்பர் குறிப்பிட்டிருந்தார்கள். அவர்களை தொடர்பு கொண்ட போது எனது போட்டோ மற்றும் பயோடேட்டா கேட்டார்கள். அந்த விவரங்களை வாட்ஸ்அப்பில் அனுப்ப சொன்னதால் நான் அனுப்பினேன். இன்ஸ்டாகிராம் ஐடி, வாட்ஸ்அப் நம்பர் ஒரு வருடத்திற்கு மேல் ஆனதால் எனக்கு நினைவில்லை. என்னுடைய செல்போன் எண்ணான 8220690259 என்ற எண்ணிலிருந்து நான் அந்த விவரங்களை அனுப்பினேன். 5 போட்டோக்கள் அனுப்பினேன். பதிவு கட்டணம் செலுத்த வேண்டும் என்று கூறி ரூ.2,000/– கேட்டார்கள். அந்த தொகையினை அவர்கள் அனுப்பிய க்யூ ஆர் கோடு மூலமாக அனுப்ப சொன்னதால் எனது HDFC ஜிபே அக்கவுண்ட் மூலமாக ஆகஸ்ட் மாதம் 2023 ல் செலுத்தினேன். அதாவது நான் Add பார்த்த தேதியான 05.08.2023 தேதியிலிருந்து 5 லிருந்து 10 நாட்களுக்குள் மேற்படி தொகையை

செலுத்தினேன்.

அவர்கள் என்னை ஏவிஎம் ஸ்டுடியோவிற்கு வருமாறும் முகவரி அனுப்புவதாக சொன்னார்கள். ஆனால் அவர்கள் முகவரி அனுப்பவில்லை. என்னிடம் மேற்கொண்டு நடிப்பு சொல்லி தருவதற்காக ரூ.8000/- செலுத்துமாறு கேட்டார்கள். அந்த தொகையையும் நான் மேற்சொன்னபடி க்யூஆர் கோடு மூலமாக எனது HDFC ஜிபே அக்கவுண்ட் மூலமாக செலுத்தினேன். அந்த தொகையினையும் நான் Add பார்த்த தேதியான 05.08.2023 தேதியிலிருந்து 5 லிருந்து 10 நாட்களுக்குள் மேற்படி தொகையை செலுத்தினேன். என்னுடைய வங்கி கணக்கில் ரூ.1 லட்சம் தொகை செலுத்தப்படும் என்றும், காலை ஏவிஎம் ஸ்டுடியோவிற்கு வருமாறு கூறினார்கள். அதற்காக ஒரு ரூ.7000/- தொகை செலுத்த வேண்டுமென்றும், மொத்தமாக ரூ.1,07,000/- தொகை எனக்கு திரும்ப அனுப்பிவிடுவார்கள் என்றும் கூறினார்கள்.

அதற்கு பிறகு நான் அந்த தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்ட போது அவர்கள் எடுக்கவில்லை. அதற்கு பிறகு ஒரு முறை போனை எடுத்து தேவிடியா பையா என்ற அசிங்கமான வார்த்தையால் திட்டிவிட்டு போனை வைத்துவிட்டார்கள். அதன் பிறகு போனை எடுக்கவில்லை அந்த எண் ஸ்விட்ஆப் செய்யப்பட்டுவிட்டது. அதற்கு பிறகு தான் நான் என்ன செய்யவேண்டுமென்று தெரியாமல் செங்கல்பட்டு சைபர் கிரைமில் புகார் அளித்தேன். அந்த இண்ஸ்ட்ராகிராம் Add னை ajithkumar-0512 என்ற எனது ஐடி மூலமாக பார்த்தேன். போலிசாரிடம் நான் அவர்கள் அனுப்பிய க்யூஆர் கோடு விவரங்கள், வாட்ஸ்அப் மெசேஜ் போன்ற அனைத்து ஆதாரங்களையும் கொடுத்தேன்.

நான் அந்த விவரங்களை பிரண்ட்அவுட் எடுத்து போலிசாரிடம் கொடுத்தேன். சாட்சியிடம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பிரிண்ட்அவுட் மற்றும் 65 பி சான்றுகளை காண்பித்த போது அந்த ஆவணங்களை தான் கொடுத்தது தான் என்று கூறுகிறார். **<u>அந்த 6 தாள்கள் கொண்ட பிரிண்ட்அவுட் மற்றும் 65 பி சான்று அதசாஆ 1 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.</u>** மேலும் சாட்சியிடம் 23.09.2023 தேதியிட்ட புகாரை காண்பித்த போது அதில் உள்ள கையொப்பம் தன்னுடையது என்று கூறுகிறார். **<u>அந்த புகார் அதசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>**

சாட்சியிடம் இன்றைய தேதியில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட சமாதான மனு காண்பிக்கப்பட்டது. அதில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்று கூறுகிறார். அவர்கள் பெற்ற பணத்தை திருப்பி கொடுத்துவிட்டதால் அவர்களுடன் சுய

விருப்பத்துடன் எவ்வித வற்புறுத்தலும் இன்றி சமாதானமாக சென்றுவிட்டதால் அந்த கையொப்பத்தை போட்டேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–** இல்லை.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/- V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.